රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.
Independence Square, Colombo 07, Sri Lanka.

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | CS/SLAS/Vacancies - Reply | |
| ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | |
| දිනය<br>திகதி<br>Date | 2023.12.18 | |

இலங்கை நிர்வாக சேவையின் தரம் I மற்றும் தரம் II உத்தியோகத்தர்களுக்கான அறிவிப்பு

**குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மற்றும் ஆட்பதிவுத் திணைக்களத்தில் நிலவும் பதவிகளுக்கு தகவல் தொழில்நுட்ப அறிவு கொண்ட உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ளல்**

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மற்றும் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் ஆகியவற்றில் நிலவும் இலங்கை நிர்வாக சேவைக்கான பதவிகளுக்கு **தகவல் தொழில்நுட்ப அறிவு கொண்ட** பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை நிர்வாக சேவையின் தரம் I மற்றும் தரம் II உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் **தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ விடயப்பரப்புடன் தொடர்புடைய** இளமாணிப்பட்டம் அல்லது முதுவிஞ்ஞானமாணி/முதுகலைமாணி அதற்குமேற்பட்ட பட்டப்பின் படிப்பொன்றினை பெற்றிருப்பது அடிப்படைத் தகுதியாகும்.

ii. விருப்பமான சேவை நிலையங்களில் பணியாற்றக்கூடிய **அதிகபட்ச சேவைக் காலத்தை இதுவரை பூர்த்தி செய்திராத** உத்தியோகத்தர்களாக இருக்க வேண்டும்.

02. அதன்படி, மேற்படி தகைமைகளை பூர்த்தி செய்துள்ள, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மற்றும் ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தில் நிலவும் இலங்கை நிர்வாக சேவையின் பதவிகளுக்கு இணைந்துகொள்ள விருப்பம் தெரிவிக்கும் விண்ணப்பதாரர்கள், அடிப்படை தகைமைகள் மற்றும் ஏனைய தகவல்களை உள்ளடக்கி தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிபரப்படிவம், இது தொடர்பான எழுத்துப்பூர்வ கோரிக்கையுடன், உரிய சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை 29.12.2023 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் தமது நிறுவனத் தலைவர் மூலம் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அதன் மென் பிரதியொன்றை pubad.dslas@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறும் தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

03. மேலும், விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது, விண்ணப்பதாரர்கள் இப்பதவிக்கு தகைமை பெற்றிருப்பின் தற்போது சேவையில் உள்ள சேவை நிலையங்களில் பின் உரிமையாளர் கொண்டு / இன்றி / பின்னர் வழங்கும் அடிப்படையில் விடுவிக்கப்படலாம் என உரிய அமைச்சின் செயலாளர் அல்லது திணைக்களத் தலைவரின் சான்றிதழுடன் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும் என்பதோடு விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பம்./கே.டி.என். ரஞ்சித் அசோக
செய லாளர்
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
தொலைபேசி : 0112-698605 / தொலைநகல் : 0112 – 683651
மின்னஞ்சல் : pubad.dslas@gmail.com